







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 24 11.06.2025




# आचार्य देवो भव

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள் உபதேசங்கள்



# முத்துக்கள்

सत्यं सत्यं पुनः सत्यं उद्धृत्य भुजमुच्यते । 1
वेदात् शास्त्रं परं नास्ति न दैवं केशवात् परम् ।।

நா. பு.(8-32): பார. (சாந்தி -360-5): வேதத்தைக் காட்டிலும் சிறந்த சாஸ்த்திரம் இல்லை, கேசவனைக் காட்டிலும் சிறந்த தெய்வம் இல்லை என்று கையை உயர்த்தி இதுவே உண்மை, உண்மை, உண்மை எனக் கூறப்படுகிறது.

यथा सर्वेषु देवेषु नास्ति नारायणात् परः । 2
तथा सर्वेषु मन्त्रेषु न मन्त्रोऽष्टाक्षरात् परः ।।

அஷ்டா- ப்ர. (1-41): எப்படி எல்லாத் தேவர்களுக்குள்ளும் நாராயணனைக் காட்டிலும் உயர்ந்தவன் இல்லையோ அப்படியே எல்லா மந்திரங்களுக்குள்ளும் அஷ்டாக்ஷரத்திலும் சிறந்த மந்திரம் இல்லை.

महर्षीणां भृगुरहं गिरामस्मि एकमक्षरम् । 3
Ko koयज्ञानां जपयज्ञोऽस्मि स्थावराणां हिमालयः ।।

கீதை (10- 25) : மஹர்ஷிகளுள் நான் ப்ருகுவாகவும், சொற்களுள் ஒற்றை எழுத்தான ப்ரணவமாகவும், யஜ்ஞங்களுள் ஜப யஜ்ஞ மாகவும், அசையாப் பொருள்களுள் இமயமலையாகவும் நான் இருக்கிறேன்.

अक्षराणां अकारोऽस्मि द्वन्द्वः सामासिकस्य च । 4
अहमेवाक्षयः कालो धाताहं विश्वतोमुखः ।।।

கீதை (10-33): எழுத்துக்களிடையே நான் அகாரமாக உள்ளேன். பல ஸமாஸங்களிடையே த்வந்த்வ ஸமாஸமாக உள்ளேன், அழியாத காலத்ரவ்யமும் நானே; திசைமுகனான படைக்கும் பிரமனும் நானே.

லோக பிரதாநன் 5

पवित्राणां पवित्रं यो मङ्गलानां च मङ्गलम् ।
दैवतं देवतानां च भूतानां योऽव्ययः पिता ।।

பார. (ஆநு - 149-10):
பரிசுத்தமானவற்றிற்கு பரிசுத்தியை அளிப்பவன் எவனோ, எவன் மங்களமானவற்றுக்கு மங்களத் தன்மையை அளிக்கிறானோ, எவன் தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமோ, எவன் எல்லாப் பிராணிகளுக்கும் அழிவில்லாத தந்தையோ.

सालम्बनो महायोगः सबीजो यत्र संस्थितः । 6
मनस्यव्याहते सम्यक् युञ्जतां जायते मुने ! ।।

வி.பு. (1-22-62): "யோகிகள் தவம்புரியும் காலத்தில் பகவத் ஸ்வரூபத்தை மாத்திரம் தியானம் பண்ணுவது மிகக் கடினம்; பண்ணினாலும் அது (ஸ்வரூபத்யானம்) மனதில் நிலைத்து நிற்காது. எனவே மனது பிறவற்றை நாடாது ஏகாக்ர மாக இருக்கும்பொழுது திவ்ய மங்களவிக்ரஹத்தையும், அதன் ஸௌந்தர்ய லாவண்யாதிகளையும், அஸ்த்ர பூஷணாதிகளையும், ஸ்வரூபத்திலுள்ள தீயவைகலவாத (ஹேயப்ரத்யனீக) கல்யாண குணங்களையும், இவற்றை விளக்கும் மந்த்ரங்களோடு தியானம் செய்தால் யோகம் நிலைத்து நீடித்து நிற்கும்" என பராசர முனிவர் மைத்ரேயருக்கு உபதேசிக்கிறார்.

चत्वार एकतो वेदाः भारतं चैकमेकतः । 7
समागतैः सुषिभिः तुलां आरोपितं पुरा ।
चतुभ्यः सरहस्येभ्यः वेदेभ्योऽधिकं यदा ।।
तदा प्रभृति लोकेऽस्मिन् महाभारतमुच्यते ।
महत्वे च गुरुत्वे च ध्रियमाणं ततोऽधिकम् ।।
महत्वात् भारत्वाच्च महाभारतमुच्यते ।
निरुक्तमस्य यो वेद सर्वपापैः प्रमुच्यते ।।

பார. (ஆதி - 1- 293 முதல் 296 வரை): ஒரு சமயம் தேவர் களும் ரிஷிகளும் சேர்ந்து நான்கு வேதங்களை ஒரு தட்டிலும், பாரதத்தை ஒரு தட்டிலுமாக வைத்துத் தராசில் நிறுத்தனர். உபநிஷத்துக்களடங்கிய நான்கு

வேதங்களைக் காட்டிலும் பாரதம் அதிகமாக இருந்தது. அது முதல் இவ்வுலகத்தில் இது மஹா பாரதம் என்று சொல்லப்படுகிறது; நிறுக்கப்படும் போது மகத் தாகவும் பாரம் என்று சொல்லப்பட்ட அர்த்த கௌரவமுள்ள தாகவுமிருந்ததாலும் மஹாபாரதம் என்று பெயர் பெற்றது. இந்தப் பெயர் வந்த காரணத்தை அறிகிறவன் எல்லாப் பாபங் களினின்றும் விடுபடுவான்

.

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
8
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ।।

கீதை (18-66) (சேதநனே!) அற்பமான ஞானமும் சக்தியும் அற்பகால வாழ்வும் மோக்ஷம் பெறுவதில் ஆர்வமும் உள்ள நீ தாமதித்துப் பலன்தரும் பக்தியோகம் முதலிய மற்ற உபாயங் களைக் கைவிட்டு, ஸுலபனாய் ரக்ஷகனாய்க் கல்யாண குணங்களை உடையனான என்னிடமே ப்ரபத்தி செய். உன் கடமை தீர்ந்து விடும். பின் பொறுப்பு என்னுடையது. எனக்கு உன்பால் அன்பும் கருணையும் மிகச் சுரந்துவிடும். என் சுதந்திரம் தடை யற்றது. எனக்கு ஸங்கல்பமே துணை. உனக்குள்ள அளவற்ற விரோதி வர்க்கத்தையெல்லாம் வேரறுத்து மோக்ஷத்தைத் தந்து எனக்கு ஸமமான போகத்தையும் பரிபூர்ண கைங்கர்யத்தையும் உனக்குச் சாச்வதமாய்க் கொடுப்பேன். இனி நீ ஒன்றுக்கும் சோகிக்கவேண்டாம்.



# நாலாயிரதிவ்யப்ரபந்தத்தில் உள்ளடங்கிய கருத்துகள்

1.ச்ரியப்பதியான நாராயணனே பரதேவதை.

2. நாராயணனே ஜகத்காரணபூதன். மற்ற எல்லாத்தேவதைகளும்- பிரும்மா, சிவன், இந்திரன், வருணன், யமன், ஸூரியன், சந்திரன் - முதலிய முப்பத்துமுக்கோடி தேவதைகளும் அவனால் படைக்கப்பட்டவர்கள்.

3.அவனே ஆதாரம்- அனைத்துக்கும். அவனே அனைத்துக்கும் கட்டளையிடுபவன். பக்தகோடிகள் செய்யும் தொண்டுகளை (கைங்கர்யங்களை) ஏற்றுக்கொள்பவன் அவனே.தொண்டுகளின் பலன் அவனைச் சார்ந்தது.

4. மேற்கூறிய 3 காரணங்களினால் அவனே அனைத்து ஜீவராசிகளுக்கும் மற்றும் செடி, கொடி, தாவரம் மற்றும் அசையும் அசையாப் பொருள்கள் அனைத்துக்கும் அந்தர்யாமி- உயிராயிருப்பவன். மற்ற அனைத்து உயிர் உள்ள உயிர் அற்ற பொருள்களும் அவனுக்கு சரீரங்கள்.

5."ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடியாக திவ்வியதேசங்களில் உள்ள எம்பெருமான்களுக்கு கைங்கர்யம் பண்ணுவதே நமது கடமை.

6.கர்மங்களுக்குக் வசப்பட்ட மனிதர்கள் கர்மங்கள் அனைத்தையும் விட்டு ஸ்ரீ வைகுண்டம் என்கிற லோகத்துக்கு செல்வதே உண்மையான மோக்ஷம். அதைக்காட்டிலும் சிறந்த புருஷார்த்தம் ஒன்றும் இல்லை

7. இந்த மோக்ஷத்தைப் பெற உபாயங்கள் பக்தி - ப்ரபத்தி- என்பவை.

8. இந்த உபாயங்கள் பகவானாலேயே பகவத்கீதை, ராமாயணம் முதலிய சாஸ்திரங்களில் உபதேசிக்கப்பட்டுள்ளன.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## திராவிட வேத பாராயணம் வைகுண்டத்திலும் உண்டு

பூவளரும் திருமாது புணர்ந்த, நம் புண்ணியனார்** தாவளமான தனித்திவம் சேர்ந்து,  தமருடனே** நாவளரும் பெருநான்மறை ஓதிய கீதமெல்லாம் **பாவளரும் தமிழ் பல்லாண்டிசையுடன் பாடுவமே.

மேற்படி பாசுரம் ஸ்வாமி தேசிகனால் பரமபதஸோபானத்தில் அருளிச் செய்யப்பட்டது. பாசுரத்தின் பொருள் உபாயத்தை அனுஷ்டித்து வைகுண்டம் சென்றவர்கள் அங்கு தமிழ்ப் பல்லாண்டு இசையுடன் பாடுவார்கள் என்பது.